113201

# திருக்காறாயில் தல வரலாறு

023:38·21193
TIC
N43
113201

உ

சிவ குகமயம்

# திருக்காருயில்

# தல வரலாறு

BOOKS
5 APR 1943

தொகுத்தவர் :

வித்துவான் - ச. தண்டபாணி தேசிகர்

திருக்காருயில் கண்ணாயிரநாதர் தேவஸ்தான

வெளியீடு

...ராது அச்சுக்கூடம்

...ப்பேட்டை, சென்னை

... 1943

...லை அணா இரண்டு

Q 22 : 38.2)1431'k

N42

113201

O23:39. அ117த
N43
113201

உ
சிவமயம்

# நன்றியுரை

திருத்தல யாத்திரை செய்யும் அன்பர்கள், அத்தலத்தோடு தொடர்புடைய வரலாறுகளை யறிந்து ஆண்டவனை அருட் செயல்கள் நிறைந்த உள்ளத்தாற் கண்டு உய்யும் வண்ணம் உண்டான பெருநோக்கால் இந்துமத அறநிலையப் பாதுகாப்பாளர் தமிழ்ப்பேரறிஞர் கோயம்புத்தூர் உயர் திருவாளர் - C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் இட்ட ஆணையின்படி எழுதப் பெற்றது. இத்தகைய நூல் வெளிவர உதவிய திரு. செட்டியார் அவர்களுக்கும் எழுதித்தந்த அறிஞர்களுக்கும் நன்றியுரித்தாகுக. உண்ணின்று இயக்கும் கண்ணாயிரநாதர் கருணை இதனைக் கண்ணுறும் அன்பர்கள் அனைவர்க்கும் ஆகுக.

இங்ஙனம்

திருக்காறாயில்
12—1—1943

முத்து. கரு. அரு. கரு. அருணாசலம் செட்டியார்
டிரஸ்டி.

113201

உ

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| கோவில் அமைப்பு | ... | 9 |
| மூர்த்தி | ... | 11 |
| சிற்பங்கள் | ... | 13 |
| புராண வரலாறு | ... | 14 |
| தீர்த்தங்களைப் பற்றியன | ... | 17 |
| தியாகேசர் | ... | 18 |
| கர்ண பரம்பரைச் செய்தி | ... | 19 |
| கல்வெட்டுக்கள் | ... | 20 |
| சாசனங்களால் அறியப்பெறும் வரலாறுகள் | ... | 23 |
| வரவு செலவு | ... | 25 |
| பூசை, திருவிழாக்கள் | ... | 26 |
| திருப்பணி | ... | 26 |
| நிர்வாகம் | ... | 27 |
| பாடல்கள் | ... | 28 |
| வழிபாடு செய்வார் அடையும் பயனாக ஞானசம்பந்த வள்ளல் வகுப்பன | ... | 28 |
| முடிவுரை | ... | 30 |
| தேவாரப் பாடல்கள் | ... | 31 |
| திருப்பதிகக்கோவை | ... | 32 |




திருப்பணியாளர்: முத்து. கரு. அரு. அருணாசலம் செட்டியார்

சிவமயம்

# திருக்காறாயில் தல வரலாறு

எல்லாம் வல்ல இறைவன் ஆன்மாக்களாகிய நாம் எல்லோரும் உய்யக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தலங்கள் பல. அவற்றுள் பதினாறு தலங்கள் சிறந்தன. அவற்றுள், ஸ்ரீ தியாகேசப் பெருமான் எழுந்தருளியுள்ள ஏழு தலங்கள் சிறந்தன. அவை சப்த விடங்க தலங்கள் என வழங்கும். அவற்றுள் விராட் புருஷனுக்கு மூலாதாரத் தலமாய் விளங்குவது திருவாரூர். இத்திருவாரூருக்குத் தெற்கே திருக்காறாயில் என்னும் தலம் விளங்குகிறது. இத்தலம் தஞ்சை ஜில்லாவில் நாகப்பட்டினம் தாலுக்காவில் உள்ளது. திருவாரூரிலிருந்து திருத்தருப்பூண்டிக்குப் போகும் பஸ் வழியில் 8-வது கட்டையில் இருக்கிறது. திருநாட்டியத்தான்குடி என்னும் மாவூர் ரோடு புகைவண்டி நிலையத்திலிருந்து தென் கிழக்காக, சுமார் 3 மைல் தூரத்தில் இருக்கிறது. அங்கு வண்டி வசதிகளும் கிடைக்கும். இத்தலத்தில் சுமார் 60 வீடுகள் இருக்கின்றன. மக்கள் தொகை சற்றேறக்குறைய முந்நூறு. இங்குப் பொதுமக்கள் தங்குவதற்கு இராமச்சந்திரம் பிள்ளை வகையரா சத்திரம் ஒன்று இருக்கிறது. சைவப் பெருமக்கள் தங்குவதற்குக் குருபூஜை மடம் இருக்கிறது. தக்க மனிதர்களும், நகரத்தார்களும் தங்குவதற்குத் திருப்பணிச் செட்டியார் விடுதியும், சு. நா. அ. அவர்கள் பசுமடமும் இருக்கின்

றன. திருக்கோயில், பஸ் ஓடும் வழியிலேயே இருக்கிறது. திருக்கோயிலுக்குக் கிழக்கே சுமார் 2 பர்லாங் தூரத்தில் வெள்ளையாறு என்ற ஒரு ஆறு ஓடுகிறது. திருக்கோயிலைச் சார்ந்த வடபக்கத்தில் ஒரு திருக்குளம் இருக்கிறது. இதற்குப் பிரம தீர்த்தம் எனப் பெயர். முற் கூறிய சத்திரத்திற்கு அருகாமையில் ஒரு குட்டை இருக்கிறது. அது குப்பமணிக் குட்டை என வழங்கப் பெறுகிறது. மற்றும் குளிப்பதற்கும் மாடு கன்றுகளுக்கும் தகுதியான முறையில் மூன்று குட்டைகள் இருக்கின்றன. இத்தலத்தின் தட்ப வெப்ப நிலை 98. இங்குள்ள மக்களுக்குப் பெரும்பான்மையான தொழில் விவசாயமே. நெல் வியாபாரமும் சிறிது நடைபெறுகிறது. இத்தலம் காரகில் காடாயிருந்தமையால், திருக்காரகில் என்பது வழக்காற்றில் மருவி திருக்காருயில் என வந்திருக்கலாம் என்று ஊகிக்கக் கூடும். இது தற்போது திருக்காரவாசல் என வழங்குகிறது. இத்தலத்திற்குப் புராணத்தில் காளாகருவனம், பனசாரண்யம், தேவதாரு வனம், பிரமபுரம், கபாலபுரம், கபித்தவன புரம், புத்திரபிரதம் முதலிய பன்னிரண்டுக்கு மேற்பட்ட பெயர்கள் வழங்குகின்றன. ஆனல் கிரேதாயுகத்தில் கபாலவனம் என்றும், திரேதாயுகத்தில் கபித்த வனம் என்றும், துவாபரயுகத்தில் பனசாரணியம் என்றும், கலியுகத்தில் காளாகருவனம் என்றும் வழங்கப் பெற்றதாகப் புராணம் அறிவிக்கின்றது. இது சப்த விடங்கத் தலங்களில் ஆதிவிடங்கர் எழுந்தருளிய தலம். இத்தலத்திற்கு எல்லையாக மேற்கே திருநெல்லிக்காவும் வடக்கே புன்னைவாசலும் கிழக்கே வலிவலமும் தெற்கே கைச்சினமும் விளங்குகின்றன. இவற்றுள் புன்னை வாசல் ஒழிந்த மூன்று தலங்களும் பாடல்பெற்ற தலங்

OFFICE OF THE ... BOOKS
8 APR 1943



களே. இத்தலத்துத் திருக்கோயிலுக்குத் தென் கிழக்கு மூலையில் ஒரு ஐயனர் கோயில் இருக்கிறது. அவருக்குக் கழனியப்பர் என்பது திருநாமம். ஈசானிய பாகத்தில் ஒரு பிடாரி கோயில் இருக்கிறது. தேரடியில் காளி கோயில் விளங்குகிறது.

## கோவில் அமைப்பு

முக்கிய தெருவின் வழியாக மோட்டாரில் செல்வோருக்கு இத்திருக்கோயிலின் பின்புறமே காட்சி வழங்கும். பின்புறத்து மதிலின்மேல் மிகச் சிறந்த சிற்பத் திறத்தை விளக்கும் திருமால் சயனத் திருக்கோலமும் அவர் மார்பில் தியாகராஜர் எழுந்தருளியிருப்பதும் ஆகிய திருவுருவம் காணப்பெறும். இது திருந்திய சுதை வேலை. இக்கோயிலின் அகலம் 115 அடிகள்; நீளம் 172 அடிகள்.

இத்திருக்கோயிலுக்கு ஒரு சிறு கோபுரம் உண்டு. அக்கோபுரம் மூன்று நிலைகளையுடையது. கோபுர வாயிலில் வெளிப்புறமாகச் செம்பாலான ஒரு கொடி மரம் விளங்குகிறது. கொடி மரத்தின் பீடத்தில் ஒரு விநாயகர் உறைந்தருளுகிருர். அவரை வணங்கிக்கொண்டு உட்புகுவோமாயின் கோயிலின் இடதுகைப்புறத்து முருகனும் வலதுகைப்புறத்து விநாயகப் பெருமானும் அருள் வெள்ளத்தையடைய வழிகாட்டி யிருக்கின்றனர். இத்திருக்கோயில் திருவீதியுஞ் சேர்த்து மூன்று சுற்றுலைகளை (பிரகாரங்களை) யுடையது. கோபுரத்தை வணங்கி உட்புகுந்தால் வலப்பக்கத்துத் தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தோன்றுவார். பின்னர் சமயாசாரியர்கள் நால்வரும் சேக்கிழார் பெருமானும் சேரக் காட்சி தருவர். எட்டு திருமுறை

களை யருளிய நால்வரோடு சேக்கிழாரையும் ஒரே பீடத்து எழுந்தருளச் செய்திருப்பது திருப்பணி யாளருக்குள்ள சைவப் பற்றைக் காட்டும் சான்ருகும். மேற்குப் பிரகாரத்துத் தென்மேற்கு மூலேயில் விசுவ நாதர் பரிவாரங்களோடு எழுந்தருளி யிருக்கிருர். அடுத் தாற்போல் மேற்குப் பிரகாரத்து விளங்குவது விநாயகர் சந்நிதி. அவர்தான் தல விநாயகர். அவர் திருநாமம் பிரமோத விநாயகர். பிரமோதம் என்பதற்குப் பெரு மகிழ்ச்சியெனப் பொருள் கொள்ளலாம். தலத்திற்கு வருவார் குற்ற நீங்கிப் பெருமகிழ்ச்சி யெய்தலின் தல விநாயகருக்குப் பிரமோத விநாயகர் எனப் பெயர் வந்திருக்க வேண்டும். அம்மையின் திருவுருவிற்கேற்ற தலேமட்டும் உள்ள உருவம் ஒன்றுள்ளது. அது எல்லே யம்மையின் திருவுருவம் என்று சொல்லப்படுகிறது. மேற்குப் பிரகாரத்து முறையே இந்திரபுரீசர் என்னும் சிவலிங்கமும், ஸ்திர லிங்கமும், கௌதம லிங்கமும் காட்சி யளிக்கின்றன. அவற்றுள் ஸ்திர லிங்கத்தின் பாணம் (குழவி) வெட்டுண்டது போலக் காணப்படு கின்றது. அந்தப் பாணம் அநேக சிவலிங்கத் தோற்றம் நிரம்பப் பெற்ற சிற்பத்திறம் செறிந்ததாகும். அதற்கு அடுத்ததாகச் சிற்பியின் சிந்தனைத் திறமும், கைச்சிறப் பும் கலந்து ஆக்கப்பெற்ற பிட்சாடனத் திருக்கோல மும் அம்பாளில்லாத சந்திரசேகரர் உருவமும் காணப் பெறுகின்றன. பின்னர் காட்சி கொடுத்த நாயனர் எழுந்தருளுந் திருமேனிகொண்டு வீற்றிருக்கின்றுர். பின்னர் முருகன் சந்நிதியும், திருமகள், கலேமகள், மாரி யம்மன் சந்நிதிகளும் இருக்கின்றன. மேற்குப் பிரகா ரத்திலே முருகன் சந்நிதிக்குத் தெற்கில் கல்லுருவத்தில் ஆக்கப்பெற்ற நடராஜப் பெருமான் இருக்கிருர். வடக்



குப் பிரகாரத்தில் சிறிய நடராஜர் எழுந்தருளுந் திரு மேனியாக வீற்றிருக்கிருர். சிவலிங்கத்தின் சந்நிதி இடதுகைப்புறத்து சந்திரன் சூரியன் பைரவர் விளங்கு கின்றனர். இவ்வாறு வலமாக வந்து முறையே வழிபா டாற்றிக்கொண்டு திருமுன் வந்தால் நந்தியம் பகவான் காட்சி. அவர் வழியனுப்ப துவாரபாலகர் அனுமதி பெற்றுச் சிவலிங்கப் பெருமான் திருவணுக்கன் திரு வாயிலே யடையலாம்.

## மூர்த்தி

இத்தலத்து எழுந்தருளியுள்ள சிவலிங்கப் பெரு மான் திருநாமம் கண்ணுயிர நாதர். சுயம்புமூர்த்தி என்பதைச் சிவலிங்கத்தின் பாணமே அறிவிக்கும். பீடங்கள் வட்டமானவை. இவர் திருநாமம் கல்வெட் டுக்களில் திருக்காருயிலுடையார் என்றும் திருக்காரு யில் நாயனர் என்றும் காணப்பெறுகிறது. புராணத்து அபராதசகேசர், சகசிராக்ஷ பரமேசர், காமேஸ்வரர் முதலிய திருநாமங்கள் வழங்குகின்றன. பிரமன் தருக்கித் தானே தலேவன் என்று இருந்த சிவாபராதத் தால் தன் பதவி இழந்து வருந்திஞன். பின் விஷ்ணு வால் உபதேசம் பெற்றுத் திருக்காருயில் வந்து ஆயிரம் ஆண்டு தவஞ் செய்தான். இறைவன் ஆயிரங் கண்களு டன் காட்சி வழங்கப் பிரமன் இன்றுமுதல் பெருமா னுக்குக் கண்ணுயிர நாதர் என்னும் பெயர் வழங்கல் வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். அதனுல் சகசிராக்ஷர் என்றும் கண்ணுயிரநாதர் என்றும் பெயர் வழங்கத் தொடங்கியது. இந்தச் சந்நிதியின் மகாமண்ட பத்தில்தான் உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியிருக்கின்ற னர். இம்மண்டபத்தின் வடக்குப் பக்கத்தில் பெரிய

நடராஜப் பெருமான் திருவுருவம் இருக்கின்றது. இது மிக அழகான திருவுருவம். இறை வழிபாட்டை முடித்து வெளி வந்ததும் தெற்குப் பார்த்த சந்நிதியாக அம்மையார் திருக்கோயில் விளங்குகிறது. அம்மையார் திருநாமம் கைலாஸ நாயகி. புராணத்து க்ஷமாவதி என்றும், பொறையுடையாள்என்றும்போற்றப்படுகிறார். அம்மையார் பஞ்சதசாக்ஷர சொரூபிணியாக விளங்குகின்றார் என்று புராணம் கூறுகிறது. அம்மை நின்ற திருக்கோலம். இவ்வம்மையின் மேல்நோக்கிய திருக்கரங்கள் ஒன்றில் அக்கமாலையும் மற்றொன்றில் (பத்மமும்) தாமரையும் இருத்தல் தனிச்சிறப்பு. இத்தலத்தில் அம்மையாருக்குத் தனிச்சிறப்புண்டு. மக்கள் செய்த பாவங்களால் உலகில் தலங்கள் மகிமை குன்றிய காலத்துப் பராசக்தியே இத்தலத்தை உயர்த்தினர் என்பது புராண வரலாறு. கண்ணாயிர நாதர் சந்நிதிக்குப் பக்கத்தில் தியாகேசர் கோயில்கொண்டருளி யிருக்கிறார். இத் தியாகருக்கு ஆதிவிடங்கத் தியாகர் என்பது திருநாமம். இப் பெருமான் சந்நிதானத்தில் இடபம் எழுந்து நிற்கின்றது. இத் தோற்றம், மகாவித்துவான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் அடியார்கள் குறைதீர்க்கப் பெருமான் திருவடிநோவச் செல்லுதல் கூடாது என்று எண்ணி, அவர் புறப்படும் சமயம் நோக்கி நிற்கின்றது என்று கூறிய பகுதியை நமது ஞாபகத்திற்குக் கொண்டு வரும். தியாகேசர் திருவாரூரரைப் போலவே இங்கும் கர்ப்பக் கிருகத்தைவிட்டு அர்த்தமண்டபத்தே எழுந்தருளி யிருக்கின்றார். இங்கு மரகத லிங்கம் ஒன்றுண்டு. அதற்கும் ஆதிவிடங்கர் என்று பெயர். இச் சிவலிங்கத் திருமேனிக்குக் காலை சந்தியிலும் சாயரட்சையிலும் அபிஷேகம் நடைபெறும். தியாகேசர் சந்நிதியில் இடது



கைப் பக்கமாக நர்த்தன விநாயகர் எழுந்தருளி யிருக்கிறார்.

தல விருக்ஷம் பலா என்று கூறப்பெறுகின்றது. தலத்தின் திருநாமம் காறாயில் என இருப்பதால் காரகில் மரம் தல விருக்ஷமாக இருக்க வேண்டும். அல்லாமலும் இத்தலம் திரேதாயுகத்தில் கபித்த வனமாகவும் துவாபர யுகத்தில் பனசாரணியமாகவும் கலியுகத்தில் காளாகருவனமாகவும் இருந்தது என்று புராணங் கூறுவதால் காரகிலே கலியுகமாகிய இக்காலத்துத் தலவிருக்ஷமாதற் சிறப்புடையது என்று துணியக் கூடும். ஆனால் தல விருக்ஷம் ஒன்றும் இப்போது அக்கோயிலில் இல்லை.

## சிற்பங்கள்

தற்கால இயல்புக்கேற்ப மதில்மேல் நந்திகளும் மதில் மூலைகளில் பூதங்களும் கோபுரத்திற் சில உருவங்களும் இருக்கின்றன. அவை சுதையாற் செய்யப்பெற்ற அழகிய உருவங்கள். கோயிலின் பின்புற மதிலில் சேஷசயனப் பெருமாளும் அவர் மார்பிற் செல்வத் தியாகரும் வீற்றிருக்கின்ற காட்சியும் அழகிய வேலைப்பாடுள்ள சிற்பம். சுவாமி அம்மன் கருப்பக் கிருகத்தின் மேல் நிலைவாயிற் படியில், கஜலக்ஷ்மியின் உருவம் கருங்கற் சிற்பமாக விளங்குகிறது.

ஆலயம் முழுதுமே நயமான வேலைப்பாடுள்ள கற்பணி; அதிலும் தேய்ப்பு வேலை செய்யப்பெற்றது. கோமுகம் என்னும் அபிஷேக நீர் விழும்பகுதி யாளி வாய்த் துதிக்கை போன்ற வேலை செய்யப்பெற்றது. வேறு சிறந்த சிற்பங்களோ சித்திரங்களோ கொடுங்கைத் தூண்களோ இல்லை.

இத் திருக்கோயிலுக்கு வெள்ளியாலான இடப வாகனம் பெரிது ஒன்றும், பிரதோஷ நாயகருக்காகச் சிறியஇடபம் ஒன்றும், மூஞ்சூறுவாகனம் ஒன்றும் இருக்கின்றன. மரத்தாலாகிய யானை, குதிரை, பூதம், மயில், ஆட்டுக்கடா, கற்பக விருக்ஷம், கைலாஸ வாகனம் முதலிய வாகனங்களும் இருக்கின்றன. வெள்ளி வாகனங்கள் திருப்பணியாளர்களாலே சொந்தச் செலவிற் செய்யப் பெற்றன. அவைகள் அவர்கள் பொறுப்பிலேயே இருக்கின்றன. மர வாகனங்கள் கோவிலுக்கு ஒப்புவிக்கப் பெற்றுள்ளன. இங்குள்ள தேர்கள் இரண்டு. ஒன்று பெரியது, மற்றொன்று சிறியது. தேர்ச் சீலைகள் சகலாத்து என்னும் ஒருவகை உயர்ந்த துணியால் சித்திரத் தையல் வேலைப்பாடுள்ளவை. சுமார் (2000) இரண்டாயிரம் ரூபா பெறுமானமுள்ள ரத்தின நகைகள் சொந்தத்தில் நிர்வாகஸ்தர்களால் செய்துவைக்கப் பெற்றுள்ளன. மற்றும் சுவாமி அம்பாள் புறப்பாட்டுப் பஞ்சமூர்த்திகள், ஆடிப்பூர அம்மன் இவர்களுக்கு வெள்ளி அங்கிகளும் இருக்கின்றன. எடுபிடிகள் எல்லா ஆலயங்களிலும் இருப்பனபோன்ற சாதாரணமானவையே.

## புராண வரலாறு

கபாலமுனிவர் அம்மையை நோக்கி அருந்தவம் ஆற்றினர். அவருடைய தவ நெருப்பைத் தாங்க முடியாது, தேவர்கள் தவித்தனர். தேவர்கள் அம்மையிடம் சென்று விரைவில் கபால முனிவர்க்கு அருள் செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். அம்மை அவ்வாறே திருவுருவினின்றும் வெளிப்பட்டு அருள் வழங்கி, "இன்று முதல் உனக்கு அருள் செய்ததுபோல மக்கள் எல்லாருக்கும் அருள் வழங்குகின்றோம். இத்



தலம் உன் பெயரால் கபால வனம் என்றே வழங்குக" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

மற்றும் பிள்ளையில்லாது வருந்திய சிவசர்மா என்னும் அந்தணன் தன் மனைவியோடு அருந்தவம் இயற்றிச் சிவானந்தன் என்னும் புதல்வனைப் பெற்றான். அப்போது உலகம் முழுதும் ஒரே பஞ்சம்; மக்கள் வாடினர். கண்ணாயிரநாதரை வழிபடுகின்ற அவன் இந்தப் பஞ்சக் காலத்து இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்தால் பஞ்சமும் தீர்க்கலாம், திருப்பணியும் நிறைவேறுமே என்று எண்ணிப் பிரார்த்தித்து வந்தான். இறைவன் அசரீரியாக "அந்தண! ஆதிசேடன் தினமும் சேஷபிலம் என்னும் தீர்த்தத்தின் வழியாக வந்து நம்மை வணங்கிச் செல்கின்றான். அவனை நாடோறும் ஒரு இரத்தினம் வைக்க ஆணையிட்டிருக்கிறோம். அதனைப் பெற்று, நீ எண்ணியதைச் செய்" என்று கூறினர். அவ்வாறே அந்தணன் கோயில் குளம் நகரம் எல்லாம் அழகுபெறப் புதுக்கினான். விழாக்கள் நடப்பித்தான். அபராதசகேசுரர் என்னும் திருநாமந்தாங்கிய கண்ணாயிரநாதர், காரணேசர்களாகிய தாங்களே பெரியர் என்று தருக்கிச் சிவநிந்தை செய்த பிரம விஷ்ணுக்களின் குற்றத்தைப் போக்கி அவரவர்கள் பதவியை அளித்தனர்.

திருவாரூரில் உள்ள கமலாலய தீர்த்தத்து மூழ்கியவர்கள் இந்திரர்களாகித் தனக்கு இடையூறாக வருதலையறிந்த இந்திரன் கமலாலயத்தைத் தூக்கிவிடுமாறு வாயுதேவனுக்குக் கட்டளையிட்டான். அவனும் அவ்வாறே செய்ய இந்திரன் சிவதீர்த்தத்தைத் தூக்கச் செய்த பாவத்தால் சிவநிந்தகனானன். அக்குற்றத்தையும் அவன் திருக்காறாயில் உடையாரையும் கைலாச நாயகியையும் வழிபட்டுப் போக்கிக் கொண்டான்.

1132-01

இலக்குமி, தானேயழகி ; திருமாலே முழுமுதற் கடவுள் ; தன் மகனாகிய மன்மதனே யழகன் என்று இறுமாந்து சிவநிந்தை, சத்திநிந்தை செய்த குற்றங்களை யும் இத்தலத்துப் பூசை, தவம், பஞ்சாக்கர ஜபம் முதலி யன செய்து அகற்றினர். காஸ்மீர தேசத்தரசனான சந்தி ராங்கதன் என்பவன் பிள்ளைப்பே றில்லாமையால் வருந்தி இத்தலத்திற்கு வந்து ஜபம் தானம் முதலிய வற்றைச் செய்து நினைத்தபடி புதல்வர்ப் பேறடைந் தான்.

மாகந்தன் என்னும் பிராமணன் வறுமையால் வாடிக் காலவமுனிவர் அறிவிக்க, இத்தலத்தை யடைந்து நோற்று, வறுமை நீங்கப்பெற்றுப் பெருஞ் செல்வனானான். அம்மை வழிபாட்டாளராகிய சுந்தர தீக்ஷதர் என்பவருடைய பெண்கள் ஒன்பது பேரும் திருக்காளத்தி யிலுக்குத் திருவிழாவுக்காகச் சென்றும் கூட்ட மிகுதியால் கடவுளை வழிபட முடியாமல் வெள் ளாற்றங் கரையிலேயே நின்றனர். காட்சியை விரும்பிக் கவன்றனர். அவர்களுக்குக் கண்ணாயிரநாதரும் கைலாச நாயகியும் உடனே காட்சி வழங்கிக் கருணை பூத்தனர்.

இன்னும் மனோரமையென்னும் தாசியொருத்தி, தன் குல முறைப்படி யொழுகக் கூசியவளாய்க் காலை ஆறு நாழிகைக்குமேல் பன்னிரண்டு நாழிகைக்குள் தம் மைத் தேடி வருவார்க்கே இரவு உரியவளாவேன் என்று விரதங் கொண்டிருந்தாள். ஆனால் சிவத்தொண்டில் சிறிதும் இடையூறின்றித், தூய்மையாக ஒழுகி வந்தாள். அவளன்பை ஆன்மாக்கட்குக் காட்டும் வண்ணம் இறை வன் கிழவேதியராகி உரிய காலத்து வந்து அவளுடம் பாட்டைப் பெற்றனர். இரவு வந்தவர் நடு யாமத்து இறந்தது போலாயினர். மனோரமை "நான் இன்று



இவர் மனைவி, இவரிறந்ததால் நானும் உடனிறக்க வேண்டியவளே" என்று உடன்கட்டை யேறினாள். இறைவன் காட்சி கொடுத்தார். மக்களறிந்து இறைவன் கருணைக்கு இரங்கி வியப்பெய்தினர்.

இவ்வாறே கபித்தன் என்னும் அந்தணன் ஒருவன் சமணராதிக்கத்தால் நெய்கிடையாமறபோக நீரைக் கொண்டு விளக்கெரித்தான் என்றும், வீரேந்திர சோழன் என்பவன் அக்கினிவேசியர் என்னு முனிவரிடம் காமக் குற்றம் நீக்கும் முறை என்னவென்று கேட்க, அவர் கண்ணாயிரரை வழிப்பட்டாற் காமநோய் நீங்குமென்றார். அவனும் அப்படியே பஞ்சாக்கரம் ஜபித்து, சிவதரிசன மும் செய்து போக்கிக் கொண்டான் என்றும், கருடன் சிவபெருமானிடமே உபதேசம் பெற்றுச் சிவத்தியானம் பண்ணிச் சிவநிந்தை செய்த குற்றத்தைத் தொலைத்து அருள் பெற்றான் என்றும் வரலாறுகள் பல மிளிர் கின்றன.

## தீர்த்தங்களைப் பற்றியன

கலாவதியென்னும் கற்புடைய மங்கை, கணவன் குற்றத்தைத் தானே பலரறியக் கூறிய குற்றத்தால் வெண்குட்ட நோயால் பீடிக்கப்பட்டாள். அவள் கணவ னாகிய தேவசருமனும் குருவும் மாமனாருமாகிய தேவலர் வீட்டுப் பொருளைத் திருடித்தின்ற குற்றத்தால் வயிற்று வலியால் வாடினான். இருவர் வருத்தத்தையும் அறிந்த தேவல முனிவர் காறாயில் நகரஞ்சென்று பிரமதீர்த்தத் தில் முழுகி இறைவனை வழிபடுங்கள் என்று உத்தர விட அவர்கள் அவ்வாறே சென்று மூழ்கி நோய்நீங்கி னார்கள். சந்திரன் குருபத்தினியைக் கூடிய குற்றத்தால் வந்த உடற்குறை நோயை இத்தீர்த்தத்தில் மூழ்கித் திரு

வாரூரில் சோமநாதம் என்னும் கோயிலையும் தாபித்து வழிபட்டுப் போக்கிக்கொண்டான். இந்திரன் வெள் ளாற்றில் மூழ்கி விண்ணவர் பெருமானை வணங்கி அசுரர்களை வென்றான்.

திருக்கோயிலின் உள்ளே வடக்குப் பிரகாரத்துள்ள சேஷ தீர்த்தம் என்னும் கிணற்றைக் காலையிற் காணின் அன்றாடம் செய்த பாபம் அகலும். மாதப் பிறப்பு அமாவாசை, சோமவாரம், பௌர்ணமி முதலிய சிறந்த நாட்களில் மூன்றுமுறை வலம் வந்து சிறிது நீரெடுத்துக் குடித்தால் பிரமகத்தி முதலிய பாவங்கள் தொலையும்; எல்லாச் செல்வங்களும் எய்தலாம் என்று புராணம் கூறுகிறது.

### தியாகேசர்

வீதிவிடங்கத் தியாகரை இந்திரன் விஷ்ணுமூர்த்தி யிடம்பெற்று வழிபாடாற்றி வந்தான். அவனிடமிருந்து முசுகுந்தன் பெற்றுத் திருவாரூரில் நிலைபெறுவித்தான். விஷ்ணுமூர்த்தி அங்குச் சென்று வழிபாடு செய்வதோடு வீதிவிடங்கருடைய அஜபா நடனத்திற்கு வாத்தியத் தொண்டும் செய்துவந்தார். நாடோறும் இவ்வாறு நடைபெறுதலைக் கருடன் மூலமாக அறிந்த ஆதி சேஷன் தானும் தியாகநடனத்தைக் காண விரைந்து போக எண்ணினார். சமயம் பார்த்திருந்த கருடன் அவ ரைத் தூக்கிச் செல்வதாக அறிவித்துத் தன் மூக்கால் கவ்வி ஆதிசேடனை இருதுண்டாக்கித் தன் வஞ்சம் தீர்த்துக் கொண்டான். ஆதிசேஷன் சிவபெருமானையே தியானித்துக் கொண்டிருந்தமையால் அவரருளால் பதஞ்சலி முனிவராகி நாள்தோறும் நடனங் காண்பா ராயினார். ஒருநாள் எல்லா வகையான நடனங்களையும்



இறைவன் காட்டியருளல் ஆகாதா என்று திருமுன் கனிந்து நின்றார். அப்போது செல்வத் தியாகர், "காரு யிலில் ஆதிவிடங்கராக இருக்கிறோம்; அங்கு வந்தாற் காணலாம்" என்று ஆணையிட, அவ்வாறே இத்தலத்திற்கு வந்து எல்லா நடனங்களையும் கண்டார். இத்தலத்து ஆதிவிடங்கர் எழுந்தருளியிருப்பது வீரசிங்காதனம். வீரசிங்காதனம் என்பது நான்கு பக்கங்களிலும் சிங்கங் களாற் சுமக்கப்பெற்றது. நடுவில் நான்கு இடபங்களும் காமதேனுவும் கற்பக விருக்ஷமும் அமைந்ததாய், அதன் நடுவில் ஸ்ரீ சக்கரமும் எல்லாப் பக்கங்களிலும் தாமரைப் பூக்களும் கொண்டு விளங்குவது. இத்தலத்துத் தியா கேசர் புரிவது குக்குட நடனம். இவை புராணத்து நிருத்த தரிசனச் சருக்கத்து நன்கு விரித்துக் கூறப் பெற்றுள்ளன.

இந்தப் புராண வரலாற்றிலிருந்து இத்தலத்தை வழிபடுவார் குற்றம் நீங்குவர்; புதல்வர்ப் பேறடைவர்; காம முதலிய பெரும் பழிகள் நீங்குவர்; செல்வம் பெறு வர்; இறைவன் அம்மையின் திருவருளை முழுதும் அடைவர்; உடல் நோய் நீங்குவர்; முத்தியும் பெறுவர் என்று பலதிறப்பட்ட பயன்கள் அறியப்பெறுகின்றன.

### கர்ண பரம்பரைச் செய்தி

மிக அண்மையான காலத்தில் ஒரு அன்பர் இத் தலத்துத் திருக்கோயிலில் ஆயிரம் சிவலிங்கங்களை வைத்து, ஆகம விதிப்படி பூசை செய்வித்துப் புதல்வர்ப் பேற்றை யடைந்திருக்கின்றார். ஒரு வணிகர் நவக்கிரக பூசைசெய்து நோய் நீங்கப்பெற்றதோடு மக்கட்பேற்றை யும் அடைந்தார் என்றும் சொல்லப்பெறுகின்றது.

பிரம தீர்த்தக்கரையில் கடுக்காய் விநாயகர் என்று ஒரு விநாயகர் எழுந்தருளியிருக்கின்றார். யாரோ வணிகன் ஒருவன் சாதிக்காய் மூட்டைகளை ஏற்றிக்கொண்டு வந்தான். இரவுக் காலத்துத் தீர்த்தக்கரையில் வண்டியை அவிழ்த்துவிட்டு உணவருந்தினான். அப்போது ஓர் அந்தணச் சிறுவன் வணிகனை நோக்கி, இது என்ன மூட்டை என்று வினவ, அறிவிக்க மனமில்லாத வணிகன் கடுக்காய் மூட்டை என்றனன். அந்தணச் சிறுவன் சிரித்துக்கொண்டே சென்று பக்கத்திலுள்ள விநாயகர் கோயிலுட் சென்றான். மறுநாள் விடிந்தது. வணிகன் மூட்டைகளை விற்றுச் சாக்கு மாற்றும் போது எல்லாம் கடுக்காய்களாக இருக்கக்கண்டு அஞ்சி, வந்தவர் விநாயகராக இருக்கக்கூடும் என்று எண்ணி அடைக்கலம் புகுந்தான். தவறு மன்னிக்க வேண்டினான். விநாயகர் கருணை மிக்கு அவ்வாறே மீண்டும் சாதிக்காயாகச் செய்தார். அதனால் இவ்விநாயகப் பெருமானுக்குக் கடுக்காய் விநாயகர் என்று பெயர் வழங்கி வருகிறது என்று கர்ணபரம்பரை வரலாறு அறிவிக்கப் பெறுகிறது.

**கல்வெட்டுக்கள்**

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் நான்கு உள்ளன. அவற்றுள் 453, 452, 454/1908 என்ற மூன்று கல்வெட்டுக்கள் மும்முடிச் சோழன் என்னும் சிறப்புப் பெயர் தாங்கிய முதல் இராஜ இராஜன் காலத்தன அவை :

453/1908. ஸ்வஸ்தி ஸ்ரீ கோராசகேசரி வன்மன் ஸ்ரீ மும்முடிச் சோழ தேவர்க்கு யாண்டு மூன்றாவது புலியூர் நாட்டு பிரமதேயம் திருக்காருயில் சபையோம் இவ்வூர் மகா தேவர்க்கு வலிவலக் கூற்றத்து கீரன்குடி அரையன் தேவடிகளான விக்கிரமசிங்க மூவேந்தவேளானிடையும் உடைய பிராட்டியார் வெளத்துப் பெண்டாட்டி விண்டனால் (?)......த்தினிடைப் பொன் கொண்டு நொந்தா விளக்குக்கு இறையிலி செய்து கொடுத்த நிலம் மா........



452/1908 ஸ்வஸ்தி ஸ்ரீ.

திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியும்
தளிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடும் கொல்லமுங் கலிங்கமும்
எண்டிசையும் புகழ்தர ஈழமண் டலமும்
இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டுதன்
எழில்வளர் ஊழியுள் எல்லா யாண்டும்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரை
தேசுகொள் ஸ்ரீகோ ராஜகேசரி வன்மரான

ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தேழாவது அருமொழித்தேவ வளநாட்டு.........நாட்டுப் பெருவயலூர் திரு.........ஈஸ்வரமுடைய மகாதேவர் கோயிலின் முன்பில் ஓலக்க மண்டபம் எடுப்பித்தான். இவ்வூரிலிருக்கும் வெள்ளா.........பனசவநேசுரரக்ஷை.

454 - 1908. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீராஜ ராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தெட்டாவது கற்கடக ஞாயிற்று பூர்வபட்சத்து சதுர்த்தசியும் புதன்கிழமையும் பெற்ற உத்தரத்து நாள் அருமொழித் தேவ வளநாட்டு புலியூர்நாட்டு மாவூர் ஊரவரேம் உடையார் திருக்காருயில் உடையார் கோயில் அதி

சண்டேசுர தேவகன்மிகளுக்கு நாங்கள் ஊர்க்கீழ் இறையிலிப் பிரமதாயமாக இசைவு [றுத்] திட்டுக் கொடுத்த பரிசாவது இவ்வூரிலிருக்கும் திருத்தொண்டர்களில் நமசிவாயத் திருமேனிக்கு எங்களூரில் காணியான நிலமாய் இந்நாயனுர் திருக்கோயிலில் திருக்கை கொட்டித் திருமுறை ஓதுவார்க்கு திருவமுதுபடிக்கு உடலாக இவர் கொடுத்த நிலமாய் இவ்வாண்டு முதல் நாங்கள் ஊர்க்கீழ் இறையிலி செய்து கொடுத்த திருக்கழிப்பாலை யென்று பெயர்கூவப்பட்ட நிலத்திற்குக் கீழ் பார்க்கெல்லைக......வாத.........பேராற்றுக்கு மேற்கும் தென்பார்க்கு எல்லை விக்கிரம சோழன் ஆதமங்கலத்து நிலத்துக்கு வடக்கும் மேல்பார்க்கெல்லை ஆதிவிடங்கன் வாய்க்காலுக்குக் கிழக்கும் வடபார்க்கெல்லை மாலூருடையான் பெரிய தேவர் நிலத்திற்குத் தெற்கும் இம்மூன்று கல்வெட்டுக்களுள் முன்னது மும்முடிச்சோழன் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற முதலாம் இராஜராஜன், தன்னுடைய ஆட்சி மூன்ருவது ஆண்டில் கயிலாச நாயகிக்கு நொந்தா விளக்குக்காக இறையிலியாக நிலம் விட்டதைக் கூறுகிறது. இருபத்தேழாவது ஆண்டில் திருக்காருயில் மகாதேவர்க்கு ஓலக்க மண்டபம் எடுத்ததைக் கூறுகிறது.

இரண்டாவது கல்வெட்டு மூன்ருவது கல்வெட்டு அவனுடைய 28-வது ஆட்சி யாண்டில் திருமுறை ஓதுவார்க்கு நிலம் விட்டதை அறிவிக்கிறது.

நான்காவதான கல்வெட்டு இராசேந்திர சோழனுடையது.

திருமன்னி வளர இருநில மடந்தையும
போர்ச்சயப் பாவையும் சீர்த்தனிச் செல்வியும்
தன்பெருந் தேவிய ராகி இன்புற



நெடிதிய லூழியுள் இடைதுறை நாடும்
தொடர்வன வேலி படர்வன வாசியும்
சுள்ளிச் சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையும்
நண்ணரு முரண மண்ணைக் கடக்கமும்
... ... ... ...
... ... ... ...

கோப்பரகேசரி வன்மரான உடையார் ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு மூன்ருவது இத்தேவர் பண்டாரத்துப் பொன்கொண்டு நிவந்தத்துக்கே மேற்படியூர் இறையிலியா.........(இ)ட்டுக் கொடுத்த நிலம் நான்மாவும் ஆக நிலன் ஏழுமாவுக்கும்.........கெல்லை கோயிலில்.........வடக்கும்......ன திருக்காருயிலுடையார்க்கு நிவந்தத்திற்கு இறை ஐம்பதெட்டேமுக்...... மெல் மேற்படி பனி விளக்கொன்று சந்நிதி திகழ்வரை முட்டாமல் எரிக்க கொனெநின் (?) மை கொண்டான்...

பழம்படிசெய் திருக்காருயில்தே...................
என்பதாகும்.

## சாசனங்களால் அறியப்பெறும் வரலாறுகள்

முதல் இராச இராசன் சென்னை இராசதானியில் முக்கால்பாகத்தைக்கொண் டிருந்தமையாலும் இவன் பட்டத்திற்கு வந்த கி. பி. 985 முதல் பத்து ஆண்டுகட்குள்ளேயே திக்குவிசயம் முடித்து மும்முடிச் சோழன் என்ற பட்டத்தைத் தாங்கியதால் (423 - 1908) கல்வெட்டில் மும்முடி தேவர் என்ற பட்டம் வழங்கப் பெறுகிறது. இவன் ஆட்சி இருபத்தேழு இருபத்தெட்டு ஆண்டுகளில் வெட்டிய கல்வெட்டுகளால் காந்தளூர் என்னும் துறைமுகத்திலுள்ள கப்பல்களை யழித்து வேங்கைநாடு, கங்கைபாடி, நுளம்பபாடி, தடிக

பாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம் இவற்றைத் தன்னகப்படுத்தினன் என்றும், பாண்டியனை வென்றான் என்றும் அறியப்பெறுகின்றது. இவனால் வெல்லப்பெற்றவன் அமரபுஜங்கன் என்னும் பாண்டியன் என்று சோழ வமிச சரித்திரம் கூறுகிறது.

மற்றும் இத்தலம் அருமொழித்தேவ வளநாட்டில் புலியூர் நாட்டில் வலிவலக் கூற்றத்து மாலூர் வட்டத்தைச் சார்ந்தது என்பதும், மாலூரில் கோயிலொன்றுண்டென்பதும், அக் கோயில்கொண்ட தேவர்க்குப் பெரிய தேவர் என்பது பெயர் என்பதும் அறியப் பெறுகின்றன. அருமொழித்தேவ வளநாடு என்பதால் அருமொழித் தேவன் என்பது இந்த இராஜராஜனுடைய பட்டப் பெயர்களில் ஒன்று. இவன் பெயராலேயே இந்த வளநாடு வழங்கியமை யறியலாம். இவன் தனக்கு இருந்த சைவப்பற்றால் திருமுறை ஓதுவார்க்கு விட்ட இறையிலி நிலத்திற்கு நான்கெல்லை கூறும் பொழுது, ஆதிவிடங்கன் வாய்க்காலுக்குக் கிழக்கு என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. திருக்காறாயில் தியாகேசர்க்கு ஆதிவிடங்கர் என்று பெயராதலால் சைவப் பற்றால் வளம் பெருக்கும் வாய்க்காலுக்கு அறிவு வளம் பெருக்கும் ஆண்டவன் பெயரே வைத்திருப்பது அறிந்தின்புறக் கூடியவற்றுள் ஒன்று.திருமுறைப்பணிக்காக நமசிவாயத் திருமேனி என்பார் நியமிக்கப்பெற்றிருந்தமையும் தேவாரங்களைக் கைத்தாளமிட்டுப் பாடலே முறையென்பதையும் அறியலாம். இதற்கு இப்போதுள்ள ஆதாரம், இத்தலத்திற்குத் தென் மேற்கில் சுமார் ஒரு மைலுக்குள் நமசிவாயபுரம் என்னும் கிராமம் இருப்பதாகும்.



முதல் இராஜராஜன் 985 (கி. பி.) முதல் 1014 வரை அரசாண்டவன். ஆதலால் இந்த தானங்கள் முறையே கி. பி. 988-ம் ஆண்டிலும், 1012-ம் ஆண்டிலும், 1013-ம் ஆண்டிலும் வழங்கப்பெற்றனவாதல் துணியக்கூடும். கி. பி. 1014-இலேயே இவன் மகன் இராஜேந்திர சோழ தேவன் பட்டத்திற்கு வந்தான். இவன் ஆண்டு மூன்றுக்குள் மைசூர் நாட்டைச் சார்ந்த இடைதுறை நாட்டையும், வனவாசியையும், கொள்ளிப் பாக்கையையும், மண்ணைக் கடக்கத்தையும் வென்றான் என்று அறியலாம். இவன் திருக்காறாயிலுடையார்க்கு நிவந்தத்திற்கும் விளக்கிற்குமாக ஐம்பத்தெட்டு சொச்ச மாநிலங்களை அளித்தமை இக்கல்வெட்டு அறிவிக்கின்றது.

## வரவு செலவு

இத்திருக்கோயிலுக்குச் சுமார் 22 வேலி நிலங்களிருக்கின்றன. அவை நன்செய் 20½ வேலி; புன்செய் 1½ வேலி. இவற்றின் நிகர வருமானம் 4000 ரூபா. கிஸ்தி 1200 ரூபா கட்டப்பெறுகிறது. மோகினிப் பணமாக அரசாங்க உதவி 1050 ரூபா கிடைக்கிறது.

திருக்கோயிலுக்குச் சொந்தமாகச் சுமார் 15 வீடுகளும், தென்னந் தோட்டங்களும் இருக்கின்றன. அவைகளிலிருந்து ஆண்டு ஒன்றிற்கு முன்னூறு ரூபா வரும். நித்திய பூசைக்காகவும் உற்சவச் செலவுகளுக்காகவும் உயர்திரு. முத்து. கரு. அரு. அருணாசலம் செட்டியார் குடும்பத்தார் அவர்கள் தமது சொந்தப் பணத்திலிருந்து 5000 ரூபா அளிக்கிறார்கள். இவ்வருமானங்களிலிருந்து ஆண்டு ஒன்றிற்கு உற்சவச் செலவிற்காகச் சுமார் 3000 ரூபாவும், நித்ய பூசை சிப்பந்திச் செலவுகளுக்காக 6000

ரூபாவும், கிஸ்தி 1000 சொச்ச ரூபாய்களும் செலவழிக்கப் பெறுகின்றன. திருக்கோயிலில் தேவார பாராயணமும் நடைபெற்று வருகிறது. பாராயணம் மாலை 6 மணி முதல் 8 மணி வரை நடைபெறுகிறது.

**பூசை, திருவிழாக்கள்**

இங்கு ஆறு காலங்கள் நடைபெறுகின்றன. காலை 6 மணி முதல் 11 மணி வரையும், மாலை 5½ மணி முதல் 9½ மணி வரையும் முறையே காலங்கள் நடைபெறும். இங்கு நடைபெறும் விழாக்களில் வைகாசிமீ விசாகத்தை யொட்டி நடைபெறும் திருவிழாத்தான் பெருவிழா. இவ்விழா 18 நாட்கள் நடைபெறும். பரிவாரங்களுக்கும் பக்தர்களுக்கும் திருவிழா முடிந்ததும் 9-ம் நாள் சந்திரசேகரப் பட்டமும் பதினோராம்நாள் வசந்தனும், பதினைந்தாம்நாள் இடப வாகனமும், பதினாறும்நாள் திருத்தேரும் நடைபெறும். மாதங்கடோறும் நிகழும் விசேட நாட்களில் அந்தந்த மூர்த்திகளுக்கும் உற்சவங்கள் நடைபெறும். மாச சிவராத்திரி, மாதப் பிறப்பு, மகா சிவராத்திரி, பிரதோஷம், நடராஜாபிஷேக காலங்கள் இவைகளில் எல்லாம் மகாபிஷேகங்கள் நடக்கின்றன. வேறு உபயங்களோ கட்டளைகளோ இல்லை. வருகிற அன்பர்களுடைய நன்மைக்காகவும் அர்ச்சகர்களுடைய நன்மைக்காகவும் அர்ச்சனைக்குக் கட்டணம் விதிக்கப்பெறவில்லை. தினந்தோறும் குழித்தளிகையுண்டு. தேசாந்திரிகளுக்குப் பிரசாதம் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திருப்பணி**

பிங்கள ஆண்டு தைமீ 10-ம் நாள் மகா கும்பாபிஷேகம் இனிது நடந்தது. முத்து. கரு. அரு. அருணா



சலம் செட்டியார் அவர்கள், முத்து. க. மா. முத்துக் கருப்பஞ் செட்டியார் அவர்கள், முத்து. க. அ. லெ. அண்ணாமலை செட்டியார் அவர்கள் ஆகிய மூவரும் சேர்ந்து அளித்த நான்கு லக்ஷம் ரூபாய் செலவில் திருப்பணி நிறைவேறிற்று. திருப்பணிச் சிறப்பினைக் கருப்பக் கிருக வேலைப்பாடுகளிலும் சுற்றுக்கட்டு மண்டப அமைப்பிலும் காணலாம். இத்திருக்கோயிலை யடுத்துத் திரு. முத்து. கரு. அரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் முயற்சியால் தி. சு. பழ. பழனியப்ப செட்டியார் நந்தனவனமும், கல்லுப்பட்டி திரு. சு. நா. அண்ணாமலை செட்டியார் அவர்கள் பசுமடமும், தேவிகோட்டை திருவாளர் - எ. பெரி. லெ. அழகப்ப செட்டியார் வகையரா குரு பூஜை மடமும், ஒக்கூர் - சி. கரு. சி. லெ. லெக்ஷ்மணன் செட்டியார் அவர்கள் வேதபாடசாலையும் செவ்வனே நடைபெற்றுவருகின்றன. திருப்பணியாளர் முத்து. கரு. அரு. அருணாசலம் செட்டியார் முயற்சியிலேயே முற்கூறிய வெள்ளி வாகனங்களும், திருத்தேர் மரவாகனங்களும், திருவாபரணங்களும் செய்துவைக்கப் பெற்றுள்ளன. சுமார் (70,000) எழுபதினாயிரம் ரூபா செலவு செய்து தேவிகோட்டை அழ. வீர. சித. சிதம்பரஞ் செட்டியார் அவர்களால் திருக்குளம் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

**நிர்வாகம்**

திருப்பணியாளர் குடும்பத்தைச் சார்ந்த திருவாளர் முத்து. கரு. அரு. கரு. அருணாசலம் செட்டியார் அவர்கள் டிரஸ்டியாக நியமிக்கப் பெற்றுள்ளனர். இத்திருக்கோயில் சென்னை இந்துமத பரிபாலன போர்டாருடைய கண்காணிப்பில் உள்ளது. இத்திருக்கோயிலில் ஒரு

மானேஜரும் குமாஸ்தாக்களும், இதர சிப்பந்திகளும் வேலை பார்க்கிருர்கள். இத்திருக்கோயிலுக்குத் திட்டம் (ஸ்கீம்) இல்லை.

**பாடல்கள்**

இத்தலத்தைப்பற்றிய இலக்கியங்கள் இருப்பன வாக அறியப்பெறவில்லை. தலபுராணம் ஒன்று வட மொழியினின்று மொழிபெயர்க்கப்பெற்று 120 பக்கங் கள் கொண்டதாக விளங்குகின்றது. புராணத்துத் தோத்திரப் பாடல்கள்மட்டும் தேவிகோட்டை வெ.ஆதி. மா. சிதம்பரஞ் செட்டியார் அவர்களால் இயற்றப் பெற்றன.

ஞானசம்பந்தப் பெருமான் அருளிய பாடல்கள் பதினென்று இருக்கின்றன. இப்பதிகம் ஒவ்வொரு திருப்பாடல்கடோறும் கண்ணுயிர நாதரை வழிபடுவார் எய்தும் பயனை எடுத்துக் கூறுகிறது.

**வழிபாடு செய்வார் அடையும் பயனுக ஞானசம்பந்த வள்ளல் வகுப்பன**

ஞானசம்பந்தப் பெருமான் இத்தலத்தைப்பற்றி 'சீர்திகழும் திருக்காருயில்', 'இயைந்த சீர்எழில் திகழுந் திருக்காருயில்', 'எழில்திகழுந் திருக்காருயில்', 'நீர்வயல்சூழ் திருக்காருயில்', 'கார்வயல்சூழ் திருக் காருயில்', 'பொழில்', 'கடிபொழில்', 'கடியாரும் பூம் பொழில்சூழ் திருக்காருயில்' என அருளிச் செய்கிருர் கள். இக்கருத்துக்களைச் சேர்த்து நோக்கும்பொழுது இத்தலம் நீர் வளம், நீரிற்கு இன்றியமையாத மேகச் செறிவு நிறைந்த வயல்வள மிக்கதெனவும், சோலைகள் சூழ்ந்த அழகான தலம் எனவும் அறியப்பெறும். இறை



வன் தன்மைகளாக உருவத் தியானத்திற்கு உற்ற முறையாகத் திருமுடி, முடிமேற்கங்கை, கொன்றை, மதி, இவைகளை நம்மனத்துப் பதிவிக்கு நிலையில் 'சடை மேலோர் நிறைகொன்றைத்தாரானே','மதியானே'என்ற அருட் பகுதிகள் அமைந்துள்ளன. மற்றும் 'தாயானே தந்தையுமாகிய தன்மையன்' என்பன இறைவன் கருணையை விளக்கும் பகுதிகள். இறைவன் வீரத்தை விளக்குவன 'மும்மதில் மாய்வித்த சிலையான்', 'காலனைக் காலாற் கடுத்தான்', 'கயிலாய மெடுத்தானை ஏதமாக' என்ற பகுதிகள். இறைவன் அரிய பொருள்கட் கெல்லாம் அரியனு யிருக்கின்றமையை இத்தேவாரத்து, 'தாமரைமேல் அயர்ந்தான் தொழும் சீரான் சேயான்', 'ஏழுலகமும் இமையோர்களும் போற்றுன்' என்ற திருவாக்குகள் விளக்கும். 'நல்லன்பர்க் கணியான்', 'நன்மா முனிவர் இடர்காத்தான்', 'முனிவர்க்கு இடர் கெடுத்தான்' என்பன இறைவன் அன்பர்க்கு எளியனு யிருக்கும் தன்மையைக் காட்டுகின்றன.

வணங்குவா ரடையும் பயன்களாக, 'ஊனமிலா தாரே', 'பாவமிலாதாரே', 'ஏதமிலாதாரே', 'மேல்வினை மேவார்','குற்றமில்லை வானுலகாள்வரே' என்று அருளும் பகுதிகள் ஆராய்ந்து இன்புறுதற்குரியன. இதில் திருக் காருயில் ஊரான் என்று ஓர் அன்பர் உள்ளங் கரைந்து உரைப்பாராயின் அவருக்குள்ள குறைகள் நீங்கும். குறை களுக்குக் காரணமான பாவங்கள் கழியும். மேல் நுகரத் தக்க பக்குவம் அடையவிருக்கின்ற ஆகாமிய சஞ்சித வினைகளும் அகலும். உயிர்க் குற்றமாகிய மலம் வலி குன் றும். அதனுல் பெரிய சிவலோகத்தை ஆள்வர் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது.

## முடிவுரை

இவ்வாராய்ச்சியால் திருக்காருயில் என்னுந் தலம் காரகில் வனமாயிருந்தமையால் திருக்காரகில் என்னும் பெயர் திருக்காருயில் என மருவியிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது. இராச இராசன் I முதல் (கி.பி.985) விளக்கமுற்றுச் சரித்திர வுலகத்தில் விளங்குவது என்பதும், கிருதயுகம் முதல் விளக்கம்பெற்றுப் புராண வுலகிற் பொருந்துவது என்பதும், முதல் இராச இராசனுலும் அவன் மகன் இராஜேந்திரசோழ தேவனுலும் நித்திய பூசை திருவிளக்குப்பணிகள் முட்டாமல் நடைபெறுவிக்கச் சுமார் 65 மா. வரையில் நிலம் விடப்பெற்றது என்பதும் அறியப்பெறும்.

இறைவன் பெத்தர்களாகிய நாமும் உய்யும் பொருட்டு வினைதீர்த்துப் பிணி போக்கி மிகுசெல்வம் அளித்து இத்தலத்து எழுந்தருளி யிருத்தலின் அன்பு நெறிப்பட்டு வணங்கி உய்வோமாக.

திருவருள் இம்மை மறுமைப் பயன்களை யளித் தருளும்.

**சிவம்**



உ

# தேவாரப் பாடல்கள்

## சம்பந்தர்

### பண் - இந்தளம்

நீரானே நீள்சடை மேலோர் நிரைகொன்றைத்
தாரானே தாமரை மேலயன் ருன்ருெழும்
சீரானே சீர்திக ழுந்திருக் காருயில்
ஊரானே யென்பவ ரூனமி லாதாரே. க

மதியானே வரியர வோடுடன் மத்தஞ்சேர்
விதியானே விதியுடை வேதியர் தாந்தொழும்
நெதியானே நீர்வயல் சூழ்திருக் காருயிற்
பதியானே யென்பவர் பாவமி லாதாரே. உ

விண்ணுனே விண்ணவ ரேத்திவி ரும்புஞ்சீர்
மண்ணுனே மண்ணிடை வாழுமு யிர்க்கெல்லாம்
கண்ணுனே கடிபொழில் சூழ்திருக் காருயில்
எண்ணுனே யென்பவ ரேதமி லாதாரே. ந

தாயானே தந்தையு மாகிய தன்மைகள்
ஆயானே யாயநல் லன்பர்க்க ணியானே
சேயானே சீர்திக ழுந்திருக் காருயில்
மேயானே யென்பவர் மேல்வினை மேவாவே. ச

கலையானே கலைமலி செம்பொற் கயிலாய
மலையானே முனைபவர் மும்மதில் மாய்வித்த
சிலையா[illegible]திக ழுந்திருக் காருயில்
நிலையானே யென்பவர் மேல்வினை நில்லாவே. ரு

ஆற்ருனே யாறணி செஞ்சடை யாடர
வேற்ருனே யேழுல கும்மிமை யோர்களும்
போற்ருனே பொழில்திக ழுந்திருக் காருயில்
நீற்ருனே யென்பவர் மேல்வினை நில்லாவே. சு

சேர்த்தானே தீவினை தேய்ந்தறத் தேவர்கள்
ஏத்தானே யேத்துநன் மாமுனி வர்க்கிடர்
காத்தானே கார்வயல் சூழ்திருக் காறாயில்
ஆர்த்தானே யென்பவர் மேல்வினை யடராவே. ௭

கடுத்தானே காலனைக் காலாற் கயிலாயம்
எடுத்தானே யேதமா கம்முனி வர்க்கிடர்
கெடுத்தானே கேழ்கிள ருந்திருக் காறாயில்
அடுத்தானே யென்பவர் மேல்வினை யடராவே. ௮

பிறையானே பேணிய பாடலொ டின்னிசை
மறையானே மாலொடு நான்முகன் காணாத
இறையானே யெழில்திக ழுந்திருக் காறாயில்
உறைவானே யென்பவர் மேல்வினை யோடுமே. ௯

செடியாரும் புன்சமண் சீவரத் தார்களும்
படியாரும் பாவிகள் பேச்சுப் பயனில்லை
கடியாரும் பூம்பொழில் சூழ்திருக் காறாயில்
குடியாருங் கொள்கையி னார்க்[illegible]ரமே. ௧௦

ஏய்ந்தசீ ரெழில்திக ழுந்திருக் காறாயில்
ஆய்ந்தசீ ரானடி யேத்தி யருள்பெற்ற
பாய்ந்தநீர்க் காழியுண் ஞானசம் பந்தன்சொல்
வாய்ந்தவா றேத்துவார் வானுல காள்வாரே. ௧௧

## திருப்பதிகக்கோவை

தண்டலைநீ ணெறிகோட்டூர் வெண்டுறையோ டழகே
தருகொள்ளம் பூதூர்பே ரெயில்கொள்ளிக் காடு
கண்டருதெங் கூர்நெல்லிக்கா நாட்டியத்தான் குடியே
காறாயில் கன்றாப்பூர் வலிவலங்கைச் சி[illegible]
டண்டர்பிரான் கோளிலிதென் றிருவா[illegible]கா
டகத்தியான் பள்ளிக்கோடிக் குழகருந்தென் [illegible]யி
லெண்டருநாற் றிருபத்தே [illegible]பர் வீழத்தி
விசைகோண மாமலைகே தீச்சரமென் றிரண்டே.

1132-01